இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 12.09.2026

# மனசாட்சியற்ற - சந்தர்ப்பவாத - கல்லாப்பெட்டி கூட்டணி!

மதச்சார்பற்ற - சமூகநீதி - வெற்றி கூட்டணி என்று பெயர் சூட்டி இருக்கிறார்கள். அவர்களது முகங்களைப் பாருங்கள்...

யாரையெல்லாம் 'கல்லாப்பெட்டி கூட்டணி கட்சிகள்' என்று விஜய் சொன்னாரோ அவர்களை எல்லாம் சேர்த்து வைத்துக் கொண்டுள்ளார். அப்படியானால் அவர்களை விஜய் வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் 'கல்லாப்பெட்டி கூட்டணிக் கட்சிகள்' என்றுதானே சொல்ல வேண்டும்?

**இந்தக் கட்சிகளின் பெயரைக் கூட உச்சரிக்கும் அளவுக்கு தகுதியற்றவர்கள் என்று நினைத்தவர்தான் விஜய். 'மற்றும் பலர்' என்றுதான் இந்தக் கட்சிகளை விஜய் அழைத்தார். இந்த 'மற்றும் பலரை'ச் சேர்த்துக் கொண்டு தான் 'தம்ஸ் அப்' காட்டுகிறார். மற்றும் பலரோடு சேர்ந்த மற்றும் சிலராக ஆகிவிட்டார் விஜய்.**

'அறிவாலயம் வாசல் வழியாக நடந்து போனாலே அந்தக் கட்சிகளை அழைத்து உள்ளே போட்டு சீட்டுக் கொடுத்து விடுவார்கள்' என்று சொன்னார் விஜய். வாசல் வழியாகப் போனதால் சட்டமன்றத்துக்குள் செல்லத் தகுதி பெற்ற கட்சிகளை வைத்துக் கொண்டுதான் இன்று முதலமைச்சர் நாற்காலியில் இருக்கிறார் விஜய். அந்தக் கட்சிகளை பனையூர் வாசலில் நிறுத்தி வைத்துத்தான் 'போட்டோ சூட்' நடத்தி இருக்கிறார் விஜய்.

'காங்கிரஸ் கட்சி தி.மு.க.விடம் விலை போய்விட்டது' என்று உளறினார் விஜய். இப்போது எதைக் கொடுத்து காங்கிரஸ் கட்சியை விலைக்கு வாங்கி இருக்கிறார் விஜய்?

'சில பல கோடிகளைக் கொடுத்து தமிழ்நாடு காங்கிரஸை, ஸ்டாலின் தனது பைக்குள் போட்டுக்கிட்டார்' என்று பேசினார். இப்போது காங்கிரஸ் கட்சிக்கு எத்தனை கோடியைக் கொடுத்து கூட்டணிக்கு கை கொடுக்க வைத்துள்ளார்?

என்ன பேசினார் விஜய்?

"அது என்ன ஸ்டாலின் சார் கூட்டணி பேரு? ... என்ன மக்கள் நலக் கூட்டணியா? மொத்த பேக்கேஜும் அங்க தான இருக்குது. ரிசல்ட் என்னன்னு தெரிஞ்சதுனால என்னவோ அவர் அப்படியே மக்கள் நலக் கூட்டணியா அதை மாத்திக்கிட்டாரோன்னு தெரியலை. உடைஞ்ச கிளாஸை ஒட்ட வெச்சது மாதிரி, கிழிஞ்ச துணியை தச்சு வெச்சது மாதிரி. ஒட்டுப் போட்ட ஒரு கூட்டணி. அவ்வளவு தான்." என்று பேசியவரும் இதே விஜய்தான். **இன்றைக்கு அவர் அமைத்துள்ள கூட்டணியைப் பாருங்கள் அப்படியே கிழிஞ்ச துணியைத் தச்சு வெச்சது மாதிரியே இருக்கிறது. உடைஞ்ச கிளாஸைப் போலவே ஐந்து பேர் முகமும் இருக்கிறது.**

ஆட்சி அமைக்கும் பெரும்பான்மையை விஜய் பெறவில்லை. 118 இடங்களை அவரது கட்சிக்கு தமிழ்நாட்டு மக்கள் தரவில்லை. எந்த தி.மு.க. கூட்டணியைக் கொச்சைப்படுத்தினாரோ, அந்தக் கூட்டணிக் கட்சிகளின் தயவைத்தான் விஜய் நாடினார்.

காங்கிரஸ் கட்சியில் ஐவர், தி.மு.க. கூட்டணியில் போட்டியிட்டு வென்றவர்கள். விடுதலைச் சிறுத்தைகளில் இருவர் தி.மு.க. கூட்டணியில் வென்றவர்கள். இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கில் இருவர் தி.மு.க. கூட்டணியில் போட்டியிட்டு வென்றவர்கள். ம.தி.மு.க.வில் இருவர் தி.மு.க. கூட்டணியில் போட்டியிட்டு வென்றவர்கள். காங்கிரஸ் கட்சிக்கு இரண்டு அமைச்சர்கள், விடுதலைச் சிறுத்தைகளுக்கு ஒரு அமைச்சர், முஸ்லீம் லீக் கட்சிக்கு ஒரு அமைச்சர் என்று வலைவீசி தனது நாற்காலியைத் தக்க வைத்துக் கொண்டார் விஜய்.

அ.தி.மு.க. வைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவி தருகிறேன், வாரியம் தருகிறேன் என்று ஆசை வார்த்தை கூறி 25 பேரின் வாக்குகளைப் பெற்ற சந்தர்ப்பவாதிதான் விஜய். பெரும்பான்மையை மெய்ப்பித்ததும் அவர்களுக்கு அமைச்சர் பதவி கிடையாது என்றார். அ.தி.மு.க.வைச் சேர்ந்த எம்.எல்.ஏ. ராஜினாமா செய்ய வைத்து, அவர்களை தனது கட்சியில் சேர்த்து இடைத்தேர்தலை எதிர்கொள்ளும் சூழ்ச்சியை அரங்கேற்றம் செய்தார். அதற்கும் நான்கு பேர் பலியானார்கள்.

விஜய் குதிரை பேரம் நடத்தியதை ஒப்புக் கொண்டார் வைகோ. 'ம.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் இருவரையும் ராஜினாமா செய்யச் சொன்னார் முதலமைச்சர் விஜய். அதை அவர்கள் இருவரிடமும் நான் சொன்னேன். அவர்கள் ஒருவரும் ஒப்புக் கொள்ளவில்லை' என்று வைகோ ஊடங்கள் முன்னாலும் சொன்னார். தனது கட்சிப் பொதுக்குழுவிலும் சொன்னார். இந்த இரண்டு பேச்சுகளும் வீடியோ காட்சிகளாக இருக்கிறது.

'முதலமைச்சர் விஜய்யே ஜெயிக்க வைக்கிறேன்னு சொல்லிட்டாரே! அப்புறம் என்ன ராஜினாமா செய்ய வேண்டியதுதானே' என்று தான் சொன்னதாக வைகோ ஒப்புதல் வாக்குமூலம் தந்துவிட்டார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தொல். திருமாவளவன் என்னவெல்லாம் பேசினார்?

**"பா.ஜ.க. பற்றி விஜய் ஏன் பேசுவது இல்லை, எங்களை தி.மு.க. கூட்டணியில் இருந்து பிரிக்கத் துடிக்கிறார்கள், அன்று ரஜினி இன்று விஜய் என்றெல்லாம் கேட்பது தமிழ்நாட்டின் சாபக்கேடு, எங்கள் கூட்டணியை உடைக்க நினைக்கிறார் விஜய், மக்களுக்கான எந்தத் திட்டத்தையும் விஜய் பேசவில்லை" என்றெல்லாம் பேசியவர்தான் அவர். இன்று விஜய்யுடன் நிற்கிறார். 'ஆதிதிராவிடர்' என்பதை பட்டியல் சமூகத்தின் ஒட்டுமொத்த அடையாளச் சொல் என முழங்கியவர், இன்று 'ஆதிதிராவிடர் நலத்துறை' என்பதே நீக்கப்பட்டதற்குப் பிறகும் 'தம்ஸ் அப்' காட்டிக் கொண்டிருக்கிறார்.**

**சந்தர்ப்பவாதம் ஒவ்வொருவர் முகத்திலும் தெரிகிறது. இவர்கள் எல்லாம் சேர்ந்துதான் போட்டோ சூட்டிங்கில் பங்கெடுத்துள்ளார்கள்.**

**விஜய் இப்போது அமைத்திருப்பதை மனச்சாட்சியற்ற - சந்தர்ப்பவாத - கல்லாப்பெட்டி கூட்டணி என்று அழைப்பதே பொருத்தமானது. அவரது வார்த்தைகள்தான் இங்கு கடன் வாங்கப்பட்டுள்ளன. கோபம் வேண்டாம்.**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நடைபெற உள்ள சட்டப்பேரவை இடைத்தேர்தலில் மதுராந்தகம் (தனி), தாராபுரம் (தனி) ஆகிய தொகுதிகளில் கழக வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்ட வழக்கறிஞர் இ.பரந்தாமன், வழக்கறிஞர் திருமதி எஸ்.சுகன்யா ஆகியோர் நேற்று முன்தினம் (10.9.2026), காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். அதுபோது கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எ.வ.வேலு எம்.எல்.ஏ., துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ., திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் ஆகியோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.9.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் இந்தியக் குடியரசுக் கட்சியின் மாநிலத் தலைவர் – முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செ.கு.தமிழரசன் அவர்கள் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை இடைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு இந்தியக் குடியரசுக் கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், இடைத் தேர்தல் நடைபெறும் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு இந்தியக் குடியரசுக் கட்சி நிர்வாகிகள் தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தார். அதுபோது கழக பொருளாளர் டி.ஆர். பாலு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எ.வ. வேலு, செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

## 'சர்க்கஸ்' ஆட்சியில் காவல்துறையிடம் பாதுகாப்பு கேட்டவர் கொடூரக் கொலை!

# Divert முதலமைச்சரின் பதில் என்ன?

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, செப். 12 -**

**சர்க்கஸ் ஆட்சியில் பாதுகாப்பு கேட்டவரை மிரட்டிய காவல்துறை அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இந்தக் கொலைக்கு, Divert முதலமைச்சர் என்ன பதில் சொல்லப் போகிறார் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டு பதிவிட்டுள்ளார்.**



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

தலைநகர் சென்னையில் மீண்டும் ஒரு கொடூர கொலை அரங்கேறி இருப்பது கடும் அதிர்ச்சி அளிக்கிறது.

'கடன் தொல்லை கொடுக்கிறார்கள்' என பாதுகாப்பு கேட்ட பிரதீப்ராஜ் எனும் இளைஞரை, 'உயிரோடு இருக்க மாட்ட.. பொய் Case போட்டு உள்ள தள்ளுவேன்' என்று திருவொற்றியூர் காவல் ஆய்வாளர் மிரட்டியதாக சம்பந்தப்பட்ட இளைஞரே வீடியோ வெளியிட்ட நிலையில், அவர் கொலை செய்யப்பட்டு இருக்கிறார்.

'CMட்ட வேணும்னா போய் சொல்லு. என்னைய ஒன்னும் பண்ண முடியாது' என்று திருவொற்றியூர் காவல் ஆய்வாளர் சொன்னதாகவும் கொலையாவதற்கு ஒரு நாள் முன்பு பிரதீப்ராஜ் கூறியுள்ளார்.

காவல்துறைக்கு பொறுப்பு வகிக்கும் முதல்வரை காவல்துறையினரே DUMMY CM ஆக நினைக்கிறார்களா?

காவல்துறையிடம் பாதுகாப்பு கேட்டால் கொலை செய்யப்படுவார்கள் என்ற புதிய வரலாற்றை இந்த Circus ஆட்சியாளர்கள் உருவாக்கி இருக்கிறார்கள்.

சட்டமன்றத்தில் சட்டம் ஒழுங்கு குறித்து கேள்வி கேட்டால், '1974 இல் என்ன நடந்து தெரியுமா,, ED என்ன பண்ணுச்சு தெரியுமா' என்று Divert செய்யும் முதலமைச்சர், இந்த கொலைக்கு என்ன பதில் வைத்திருக்கிறார்.

இந்த வழக்கில் திருவொற்றி யூர் காவல் ஆய்வாளர் உட்பட சம்பந்தப்பட்ட அனைவர் மீதும் வழக்குப் பதிவு செய்வதோடு, சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை பெற்றுத் தர வேண்டும்.

தலைநகரில் மீண்டும் ஒரு கொலை நடக்காமல் இருப்பதற்கு தேவையான கடுமையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

## சட்டமன்றத்தில் முதல்வரின் அவதூறுப் பேச்சு!

# கரூர் மாவட்டக் கழகம் சார்பில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

*கரூர், செப்.12-*

*சட்டமன்றத்தில் முதல்வரின் அவதூறு பேச்சுக்கு கண்டனம் தெரிவித்தும், உடனடியாக மன்னிப்பு கேட்க வலியுறுத்தியும், கரூர் மாவட்டக் கழகம் சார்பில், கரூரில் தலைமை தபால் அலுவலகம் முன்பு நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகத்தினர், பொது மக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுமாய் கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*



*இது குறித்து மாவட்டச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*சட்டமன்றத்தில் காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுப்பிய உண்மையான, ஆணித்தரமான கேள்விகளுக்கு முதலமைச்சர் விஜய் பதிலளிக்காமல், 45 ஆண்டுகளுக்கு முன்பு, 50 ஆண்டுகளுக்கு முன்பு சம்பங்களை சொல்லியும், உடல்மொழி காட்டியும் பேசியது கேட்டு தமிழகமே வெட்கித் தலைகுனிந்தது.*

*அதுமட்டுமல்லாமல், முதலமைச்சரின் பேச்சுக்கு த.வெ.க. கூட்ட ணியில் உள்ள மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிகள், ஆன்றோர் சமூக ஆர்வலர்கள் என்று பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.*

*தமிழ்நாட்டில் தினந்தோறும் கொலை கொள்ள, போதை கலாச்சாரம் என்று சீரழிந்து வரும் இளைஞர்களை திசை திருப்பும் வகையில் முதலமைச்சர் தனது சினிமா டயலாக் சூட்டிங் ஸ்பாட்டாக சட்டமன்றத்தை மாற்றி விட்டதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கண்டித்து உள்ளார்கள்.*

*திராவிட முன்னேற்றக் கழகத்தையும், ஐந்து முறை இந்த நாட்டை ஆண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், இந்தியாவின் புகழை தோகா மாநாட்டில் நிலை நாட்டிய பொருளாதார மேதை முரசொலி மாறன் அவர்களையும், திருமணமான ஐந்தே மாதத்தில், 23 வயதில் மிசா என்னும் கொடிய அவசர நிலைச் சட்டத்தில் கைதாக்கப்பட்டு சிறைச்சாலை சித்திரவதைகளை அனுபவித்து, ஓராண்டு காலம் சிறையில் இருந்து தியாகத்தைச் செய்த நம் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தியாகத்தை கொச்சைப்படுத்தி, தமிழ்நாடு சட்டமன்றத்தில் விஜய் பேசிய பேச்சு கடுமையான கண்டனத்திற்குரியது.*

*அவரது ஆணவ, அவதூறு பேச்சு மூலமாக சட்ட மன்றத்தின் மாண்பு, மரபு, வரலாறு இவை அனைத்தும் காற்றில் பறந்து கொண்டிரு க்கிறது. ஆட்சியின் தோல்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் தப்பித்துக் கொள்ள கொச்சையான பேச்சுக்களை பேசும் தரமற்ற இவரது இப்பேச்சுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் தலைமைக் கழகம் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தும் படி அறிவுறுத்தியுள்ளது.*

*அதன்படி, சட்டமன்றத்தில் ஆணவமாக, அவதூறாக, பொய்யாக பேசிய முதலமைச்சர் விஜய்க்கு கண்டனம் தெரிவிக்கும் வகையிலும், அவரது தரமற்ற பேச்சை உடனடியாக திரும்பப் பெற வலியுறுத்தியும், அவ்வாறு பேசியதற்கு உடனடியாக மன்னிப்பு கேட்க வலியுறுத்தியும் கரூர் மாவட்டக் கழகம் சார்பில் கரூரில் தலைமை தபால் அலுவலகம் முன்பு இன்று (12.9.2026-சனிக்கிழமை) காலை 10 மணிய ளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெறுகின்றது.*

*எனவே இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், முன்னாள் உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பி னர்கள்,மாநகர, பகுதி, நகர, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக் கழகச் செய லாளர்கள், அனைத்து அணிகளின் தோழர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதி நிதிகள், கழக முன்னணித் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.*